# இந்துக்கிராமியத் தொன்மங்களில் ~ மீவியல் தொழிற்படுகை ~ ஒரு நோக்கு

**எஸ்.முகுந்தன்**
இந்து நாகரிகம் கற்கைகள் பிரிவு
கிழக்குப்பல்கலைக்கழகம்

ஐதீகங்கள் அல்லது தொன்மங்கள் என்பவை குறித்த பண்பாட்டுச் சூழமைவுடன் தொடர்புடையவை. அப் பண்பாட்டுப்புலத்துள் உலவுகின்ற தெய்வங்கள், சமூகத் தலைவர்கள் பற்றிய கருத்தாடல்கள்இ அண்டவியல் பற்றிய சிந்தனைக்கோலங்கள்இ வாழ்வியல்சார் சடங்குகள் போன்ற யாதாயினும் ஒன்றுடனாவது தொடர்புடையவையாகவே விளங்குகின்றன. அனேக சந்தர்ப்பங்களில் ஒரு தொன்மத்தின் பயில்நிலை என்பது இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இயைந்து பின்னப்பட்ட சிக்கலான அமைப்புருவாக விளங்கக் காணலாம்.

இந்நிலையில் "தொன்மம்" என்றால் என்ன என்பது பற்றிய ஒரு புரிதல் முயற்சி இன்றியமையாததாகும். தொன்மம் என்பதன் ஆங்கிலப்பிரதியீடான " Myth" என்ற பதத்தின் புராதனகாலப் பயில்நிலையை கிரேக்க வரலாற்றாசிரியராகிய ஹெரொடோடஸ் (Herodotus) காலத்திலிருந்து (கி.மு 4ஆம் நூற்றாண்டு) இனங்காண முடிகின்றது. புரிந்துகொள்ளமுடியாத யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட, பகுத்தறிவால் நிரூபிக்க-முடியாத, சில விடயங்களைக் குறிப்பதற்கு இச்சொல்லாட்ல் பிரயோகிக்கப்பட்டதனை ஆய்வாளர்கள் அடையாளங் காட்டியுள்ளனர். "The word "myth" has also – ever since the time of Herodotus, a Greek writer and historian in the $4^{th}$ Century B.C.E come to be used to designate a story or the understanding of some matter as fictional and even downright false…."[1] **(Endnotes)**

இத்தொன்மங்கள், குறித்த பண்பாட்டு உறுப்பினர்களிடையே தலைமுறை தலைமு றையாகக் கையளிக்கப்பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் புனிதமான வாய்மொழி விவரணங்-களாகவே அச்சமூக உறுப்பினர்களிடையே பரிமாறப் படுகின்றன.

"A traditional sacred story typically revolving around the activities of gods and heroes,
which purports to explain a natural phenomenon or cultural practice................"[2]

தொன்மங்கள் யாரால் உருவாக்கப்பட்டன? எப்பொழுது உருவாகின? என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில்கள் இல்லை. அவை குறித்தசமூகத்தின் கூட்டுமனப்பதிவாகவே பெரும்பாலும் கருதப்படுகின்றன. குறித்த சமூக பண்பாட்டுப் புலத்தில் யாதாயினும் ஒரு சமூக நியமத்தையோ அன்றி விழுமியத்தையோ அச்சமூக உறுப்பினர்கள் பேணிவைப்-பதற்காகப் புனிதமான, சடங்கு நிலைசார்ந்த பயில் நிலையில் வெளிப்படுத்தப் படுகின்றவையாயும் இத்தொன்மங்கள் திகழ்கின்றன.3

தொன்மங்கள் வாழ்தளத்தின் முரண்பாடுகளையும் இருதலைக்கொள்ளி போன்ற இரட்டைநிலைச் சிக்கல்களையும் (ambivalences) எதிர்கொள்வதற்கு உதவுகின்றன. மேலும் எதிர்கொள்ளும் முரண்பாடுகளிலிருந்து தன்முனைப்புடைய ஆற்றலை உருவாக்குவதற்கும் தொன்மங்கள் உதவுகின்றன. இதனை Nuckolls மேல்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"This is not to argue that myths function only to relieve ambivalences, although this is one their functions.Myths develop from the creative potential locked in ambivalence by transforming ambivalence into a

source of creative energy. In this Sense, they become progressive, as Obeyesekere uses the term and develop according to their own cultural logics"[4]

**மீவியல்**

மீவியல் என்ற சொல்லானது ஆங்கிலத்தில் liminality என வழங்கப்படுகிறது இது இலத்தீன் மொழியிலுள்ள "limen" எனும் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இச்சொல்லிற்கு வாயிற்படி, நுழைவாயில், தோரணவாயில், தொடக்கம், முகப்பு எனப்பொருளமைதிகள் உண்டு.5

எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் தளம்/களம் ( space ) அவசியமானது. தளம்.`.களம் என்பது காலரீதியானதாகவோ இடரீதியானதாகவோ இணைவுற்று அமையப் பெற்றிருக்கும். இந்த நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்கள் அல்லது தொடர்புடையவை (இயற்கைச்சக்திகள், விலங்குகள், etc) இவைதாம் என்பதும் தெளிவாக வரையறை செய்யப்பட்டிருக்கும்.

ஆனால் "மீவியல் களம்" என்ற எண்ணக்கருவில் காலம், இடம், பங்குபற்றுவோர் பற்றித் தெளிவாக வரையறை செய்யமுடியாது. மறுதலையாகக் கூறினால் இவற்றை தெளிவாக வரையறுக்கமுடியாத நிலையே "மீவியல்" ஆகும். இவ்வகையில் Arnold van Gennep, Victor Turner ஆகிய இரு மானிடவியலாளர்கள் "மீவியல்" பற்றிய கருத்தமைவை சமய பண்பாட்டுப்புலத்தில் அதிகம் பரீட்சித்துப்பார்த்தவர்கள் ஆவர். குறிப்பாக Victor Turner சமயஞ்சார்ந்த சடங்குகளில் இந்த "மீவியல் கருத்தாக்கத்தை" அதிகம் அடையாளப்படுத்தியவர் எனலாம்.

"Turner noted that in liminality, the transition state between two phases, liminality is a limbo, an ambiguous period characterized by humility, seclusion, tests, sexual ambiguity and communities......[6] அந்த வகையில் நிச்சயமற்றதன்மை, ஏகாந்தம் முக்கியமானதொரு முடிவை எதிர்பார்த்திருக்கும் நேரம், பாலியல் சார்ந்த குழப்பநிலை என்பது போன்ற பலவகை அம்சங்களைக் கருத்தூன்றி ஆய்ந்த Victor Turner இறுதியில் அவற்றை பிரதான தொகுதிகளாக எடுத்துரைத்தார். அவையாவன

1) மீவியல் இடங்கள் (Liminal Spaces)
2) மீவியல் மனிதர்கள் (Liminal Persons)
3) மீவியல் நேரங்கள் (Liminal Times)

இந்துப் பண்பாட்டைப் பொறுத்தவரையில் Victor Turner உடைய மேற்கூறிய "மீவியல்" தளங்கள் மேல்வருமாறு அமைகின்றன.

*மீவியல் இடங்கள்:*

(Liminal Space) குடியிருப்புக்கு வெளியே உள்ள எல்லை, மரங்கள், பாழுங்கிணறுகள், குளம், ஏரி...
(இவை பொதுவாக நாடுசார் தளத்திற்கும் காடுசார் தளத்திற்கும் இடைப்பட்டதாக அமையப் பெறுபவையாகும்)

*மீவியல் நேரம் :*


(Liminal time) ஒரு நாளின் உச்சிப் பொழுது -(மதியம் 12மணி) நள்ளிரவு - (இரவு12மணி) (இப்பொழுதுகள் நிச்சயிக்க முடியாத பொழுதுகள் ஆகும்)

*மீவியல் மனிதர்கள் :*


(Liminal Persons)பருவமடைந்த ஆனால் திருமணமாகாத ஆண்கள், பெண்கள் (இவர்கள் சிறுவர்களுமல்லர், பெரியவர்களுமல்லர்)கருவுற்ற பெண்கள் (இவர்களும் இருமைப்பண்புடையவர்களே)7

இந்துப்பண்பாட்டைப் பொறுத்தவரையில் களம் என்பது கிடைமட்டத்தில் நாடுசார் களம், காடுசார் களம் என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. அது போலவே, செங்குத்துத்தளத்தில் தளமானது மண்ணுலகம், விண்ணுலகம் என நோக்கப்படுகின்றது. பருண்மையான புவிப்பரப்பு நாடுசார் களமாயும், தெய்வ ஆற்றல்களும் - புனித ஆன்மாக்களும் உறைகின்ற இடம் விண்ணுலகம் ஆகவும் (காடுசார் களமாயும்) கருதப்படுகின்றது. இவ்விரண்டு தளங்களுக்கும் இடைப்பட்ட அந்தரமான, வெறுமை நிறைந்த எவ்விதமான தனிப்பண்பும் அற்ற "வெளியே" மீவியல் களமாகும்.

கிடைத்தளம்




செங்குத்துத்தளம்




தொன்மங்கள் பற்றிய அறிதலுடனும் "மீவியல்" பற்றிய விளக்கத்துடனும் இயைந்த வகையில் "காடேறி" என்ற தொன்மத்தைப் புரிந்துகொள்ள முயல்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

காடேறி :- இந்துப்பண்பாட்டு மரபில் மிகுந்த அச்சத்துக்குரியதும் சூலுற்ற பெண்களையும் பருவவயதினரையும் பலிகொள்ளும் இயல்புடையதாக நம்பப்படுவதுமான, ஆகம நெறிமுறைக்குள் உள்வாங்கப்படாத ஒரு பெண்சக்தியே "காட்டேறி" ஆகும்.

காட்டேறி என்ற சொல் காடூ ஏறி அதாவது காட்டுக்கு ஏறியவர் -காட்டுக்குச் சென்று குடியேறியவர் என்ற பொருளமைதியைத் தருகிறது.

இந்து வழிபாட்டு மரபில் காடு என்பது பொது வாழ்வியற் புலத்துக்கு எதிரான இயற்கைப்புலமாக அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது. மேலும் காடு என்னும் களம் (Space) கோபம், அச்சம், குடும்ப உறவுகள் அற்ற நிலை, சாவு போன்ற தன்மைகளின் குறியீடாகவும் செயற்படுகின்றது.

நாடுசார் களத்தில் ஓர் உறுப்பினராக வாழ்ந்த ஒருவர் ஏதோ சில காரணங்களால் "காட்டுக்கு ஏறியிருக்கிறார்" காடுசார் களத்தை நோக்கி - நிலைபெயர்ந்திருக்கிறார். நாடுசார்களத்தில் அவர் பெற்ற கசப்பான அல்லது முரண்பட்ட அனுபவங்கள் அவரை இத் தளப்பெயர்ச்சிக்குக் கட்டாயப்படுத்தியிருக்கலாம். இதனால் காடுசார் களத்துடன் ஒன்ற முடியாமலும், தனது இருப்பான நாடுசார்களத்திற்குத் திரும்ப இயலாமலும் "மீவியல் களத்தில்" அலைந்துகொண்டிருக்கும் ஆக்ரோ'மான, அவலம் நிரம்பிய ஒரு சக்தியின் குறியீடாகவே காட்டேறி பற்றிய தொன்மமும் அமையப்பெற்றுள்ளது.

இது மட்டுமன்றிக் காட்டேறி தொடர்பாக இந்தியாவிலும், குறிப்பாகத் தென்னாட்டிலும் இலங்கையிலும் நிலவுகின்ற

ஜதீகங்கள் மேல்வருமாறு அமைகின்றன.

- காட்டேறி ஒரு ஆக்ரோ'மான பெண் சிறு தெய்வம்
- அது ஊருக்கு எல்லைப்புறங்களில், ஏரி, குளம் வயற்கரைகள் காடுகளில் உறைகின்றது (கவனிக்கவும் மீவியல் இடங்கள்)
- உச்சிப்பொழுது (நண்பகல்) நடுநிசிப் பொழுதுகளில் நடமாடுகின்றது. (மீவியல் நேரங்கள்)
- சூலுற்ற தாய்மாரையும், பருவ வயதினரையும் வலிந்து தாக்குகின்றது. (மீவியல்மனிதர்கள்)8[8]

இங்கே காட்டேறி பற்றிய தொன்மத்தில் Victor Turner தொகுதிப்படுத்திய மீவியலின் மூன்று நிலைகளும் பிணைந்திருப்பது அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

தமிழகம், மற்றும் புதுச்சேரிப் பகுதிகளில் காட்டேறித் தெய்வத்துக்கான படையலாக, கர்ப்பிணித் தாய்களுக்குத் தரப்படுகின்ற நாட்டுப்புற மருந்துணவான "குளிசெலவு" படைக்கப்படுகின்றது. இது மட்டுமின்றி பொதுவாக காடேறிக்கு அளிக்கப்படும் படையல்களில் முட்டை, முருங்கைக்கீரை, அகத்திக்கீரை ஆகிய சத்துணவுகள் இடம்பெறுகின்றன. மேலும் கறுப்புநிறத்திலான காதணிகள், கழுத்தணிகள்இ சேலை துணிகள் ஆகியவையும் இடம் பெறுகின்றன.[9]

ஆந்திரா மாநிலத்தில் உள்ள நெல்லூதர் என்ற இடத்தில் காட்டேறி வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட தனியிடமொன்றில் (ஊருக்கு வெளியே) சுமங்கலிப்பெண்கள் ஒன்று கூடி, நிறைகுடம் வைத்து அதற்குச் சேலை முதலானவற்றைப் படைத்து, கூட்டமாகப் பாடி ஒருவகை உரத்த ஒலி எழுப்பி வழிபடுகின்றனர். பின்னர் ஒருத்திமட்டும் பூசையை நிகழ்த்துகின்றாள். பூசை நடைபெறுகின்றபொழுது ஏனைய

பெண்கள் அந்த இடத்தை விட்டுத் தூர நகர்ந்துவிடுகின்றனர். பூசை நிகழ்த்தியவள் அது முடிந்தவுடன் நீராடி காட்டேறிக்குப் படைக்கப்பட்ட சேலையை உடுத்திக் கொள்கின்றாள். பின்னர் கோழியைப் பலியிடுகிறாள். அந்த உணவைப் பின்னர் எல்லோரும் சமைத்து உண்கின்றனர்.

இந்த வழிபாட்டுச் சடங்கினூடே ஒரு குறியீட்டுத்தன்மை துலங்குவது தெரிகின்றது. அதாவது நிறைகுடம் கருவுற்ற தாயைக் குறித்து நிற்பதாகக் கருதலாம். பூசை நடாத்துகிற பெண்ணைத்தவிர யாரும் உடன் இல்லாத தன்மை என்பது கர்ப்பிணி குழந்தையைப் பிரசவிக்கும் போது மருத்துவிச்சியைத்தவிர அருகே யாரும் இருக்கக்கூடாது என்கிற இயல்பான நாட்டுப்புறவழமையுடன் தொடர்புபடுத்தி நோக்கப்பட வேண்டியதாகும். பூசை நிறைவுற்ற பின் பூசை செய்த பெண் காடேறிக்குப் படைக்கப்பட்ட சேலையை அணிந்து வருவதானது பிரசவம் பார்த்த மருத்துவிச்சிக்குப் பரிசாகச் சேலை அளிக்கப்படும் வழக்கத்தை நினைவூட்டுவதாயுள்ளது. கோழியின் இரத்தம் பலியிடப்படுவதும், பூசை முடிந்த பின் குளிப்பதும், அச்சூலுற்றதாய்க்கு அல்லது குழந்தைக்கு அல்லது இருவருக்கும் நேர்ந்த அவலத்தின் குறியீடாகக் கருதமுடியும். சடங்கின் போது பெண்கள் கூட்டமாக எழுப்புகின்ற ஒரு வகையான அவல ஒலி (குலவை போன்றதல்ல) இதனை மேலும் உறுதிப்படுத்தும் விதமாயுள்ளது.

சுமங்கலிப் பெண்களும், கருவுற்ற பெண்களும் தங்கள் நலத்துக்காகவும், எளிதான பேறுகாலத்துக்குமாகக் (சுகப்பிரசவம்) காட்டேறியை மேற்கூறிய முறையில் வழிபடுவதாகச் சில ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.[10]

தமிழ் நாட்டில் சில இடங்களில் அங்காளம்மனுடன் தொடர்புபட்ட "மயானக் கொள்ளை" எனும் சடங்கிலும் காட்டேறி தொடர்பான விடயங்கள் இடம்பெற்றுள்ளன. "வல்லாளகண்டன்" என்ற கொடிய அசுரனின் மனைவியாகிய, நிசாசினியின் பிரசவத்தைத் தடுப்பதற்கு, அங்காளம்மனே பேறுகால மருத்துவிச்சியாகச் சென்றதாயும், காட்டேறியும் உடன் சென்று குழந்தையையும் தாயையும் கொன்றுவிட்டதாயும் ஒரு தொன்மக்கதை இந்த மயானக் கொள்ளைச் சடங்கின் பின்னணியில் உள்ளது. இங்கும் காடேறி பிரசவத்துடன் தொடர்புறுவது கவனிக்கத்தக்கது.

இவற்றையெல்லாம் சீர்தூக்கி நோக்குகையில் "காடேறி" என்கிற தொன்மத்தை மேல்வருமாறு கட்டவிழ்ப்புச் செய்ய முனைவது பொருத்தமானது:

1) காடேறி ஒரு காலத்தில் பிறந்து வாழ்ந்த ஒரு பெண் அல்லது பல பெண்களின் நிலை தொடர்பான தொன்மம்
2) இப்பெண் அல்லது பெண்கள் கருவுற்றிருந்து, குழந்தையைக் கருவுயிர்க்குங் காலத்தில் குழந்தையுடன் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம்.
3) கருவுயிர்ப்பு என்பது பெண்ணினைப் பூரணப்படுத்துவது என்பது இந்துப்பண்பாட்டு ஐதீகம்
4) எனவே மீவியல் பருவத்தில் (கருவைச்சுமக்கின்ற பொழுது) அழிவுற்றுப்போன அந்தப்பெண், மீவியல் நேரத்தில் மீவியல் களங்களில் சஞ்சாரம் செய்து, மீவியல் மனிதர்களைத் தாக்குவதாக இந்தத் தொன்மத்தின் தர்க்கம் கட்டமைக்கப்பட்டுள்ளது.
5) நிறைவேறாத ஆசைகளுடன், மீவியல் தளத்தில் ஆக்ரோ'த்துடன் உலவுகின்ற துர்தேவதையாகக் காட்டேறி என்கிற தொன்மம் பரிணமித்துள்ளது.

6) கர்ப்பிணிகள் மீது சமூகம் கொள்ள வேண்டிய அக்கறை, அதீத கவனிப்பு என்பதே இத் தொன்மத்தினூடாக முன்கொண்டு வரப்படுகின்ற சமூக விழுமியப்பண்பாகக் கொள்ள முடியும்.

கருவுற்ற தாயின் மீது குறித்த பல காரணங்களால் சமூகத்தின் அக்கறை அமையாத போது அல்லது சமூகப்பாராமுகத்தின் விளைவு, "காட்டேறி" பற்றிய தொன்மத்தின் உருவாக்கம் என்றும் கருதலாம்.

இந்துக்களின் நாட்டார் வழிபாட்டு மரபில் இடம்பெறுகின்ற பெண் தெய்வங்களிற் பல சமூக அநீதியால் தெய்வமாகியோர் அல்லது தெய்வமாக்கப்பட்டோர் என்பதற்கு அனேக சான்றுகளை சமூக மானிடவியலாளர்களும் பண்பாட்டியலாளர்களும் முன்வைத்துள்-ளனர். "காட்டேறி" என்கின்ற நாட்டார் தொன்மத்தையும் இவ்வகையில் நோக்குவது பொருத்தமானதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

அடிக்குறிப்புகள்


1. Sushil,M.,Gene,T., (ed), 2004, The Hindu World, Roultledge publishers, New York.p.76.
2. Cheryl Chen,2003, A matter of time , Department of Philosophy, BrynMawr College, Florida. p.16.
3. www.Wikipedia.org.
4. Nuckolls, Charles, 1996, The Cultural Dialectics of Knowledge and desire, Madison, University of Wisconsin press, P. 151

5. பக்தவத்சல பாரதி,2002, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை. ப.254
6 . "Turner – luminal" – www.wikipedia.org.
7. பக்தவத்சல பாரதி,2002, மே.கூ.நூ, பக். 254 – 255
8. Kingsly,David,1987, Hindu Goddess: Visions of the Divine Feminine in the Hindu religious tradition, Delhi. P.48
9. பிலவேந்திரன்,ச.,2002, தமிழ்ச்சிந்தனை மரபு: நாட்டுப்புறவியல் ஆய்வுகள், தன்னானே பதிப்பகம், சென்னை. ப.110.
10. Elmore , Wilber ,1925, Dravidian Gods in Modern Hinduism, The Christian Literature Society, India. pp. 45-46